## செய்திக்குறிப்பு

தேதி: 03-02-2017

காரைக்கால் மாவட்டம் அம்பகரத்தூர் மாரியம்மன் கோவில் எதிரில் இன்று 03.02.2017 ஆதி திராவிட மக்களின் குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது . நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய மாண்புமிகு வேளாண்அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன் அவர்கள் இந்த குறை தீர்ப்புமுகாம் ஒரு மாதம் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நடை பெறும் என்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நானும் சமூக நலத்துறை அமைச்சர் திரு.கந்தசாமி அவர்களும் காரைக்காலில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் சென்று மக்களை சந்தித்தோம், அப்பொழுது மக்கள் ரேஷன் கார்ட் இல்லை, லைட் எரியவில்லை, தண்ணீர் வசதி இல்லை, பட்டா பெயர் மாற்றப்படவில்லை என்று நிறைய குறைகளை கூறினார்கள். அதன் தொடர்ச்சியாக இன்று அனைத்து துறை அதிகாரிகளையும் ஒரே இடத்தில் வரச் சொல்லி மக்கள் குறைகளை கேட்டறிகிறோம். இங்கு எழுத்து மூலமாக கூறும் அனைத்து குறைகளையும் ஒரு மாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும் என்றும் இதற்கு தனி ரிஜிஸ்டர் போட்டு உங்கள் குறைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்கள். மேலும் புதிய ரேஷன் கார்டு, விட்டுப் போன 4000 ரூபாய் பணம் மற்றும் அரிசி பணம் ஆகியவற்றையும் மக்கள் கூறலாம் என்றும் மாண்புமிகு அமைச்சர் கூறினார்கள். மேலும்முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை

தொ. -2-

மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மேலும் 184 கோடி செலவில் இலவச அரிசி போடப்படுகிறது. இந்த மாதத்திற்கான அரிசி 10ம் தேதிக்குள் போடப்படும் என்றும் அடுத மாதத்திலிருந்துமுதல் வாரத்தில் இலவச அரிசி போட நடவடிக்கை மேர்க்கொல்லப்படும் என்றும் 100 நாள் வேலை காரைக்காலில் ஆறு மாத காலத்தில் மொத்தம் 38 நாட்கள் வேலை அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 06 மாத காலத்திற்க்குள் மீதமுள்ள நாட்க்களுக்கு வேலை அளிக்கப்படும் என்றும் கூறினார்கள். உடன் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு.மங்கலாட் தினேஷ், சார்பு ஆட்சியர் திரு.R.கேசவன் இ.ஆ.ப குடிமை பொருள் வழங்கள் துறை துணை இயக்குநர் திருமதி.கீதா உள்ளாட்சி துறை துணை இயக்குநர் திரு.மகாலிங்கம் சமூக நலத்துறை துணை இயக்குநர் திருமதி.சத்யா மற்றும் பொதுப்பணித்துறை, வேளாண்துறை, மின் துறைஉயர் அதிகாரிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Asst. P. R. O. :
COLLECTOR